## அலகு – 4

## பெண்கள் மீதான வன்முறையும் மகளிர் பாதுகாப்பும்

### பெண்களுக்கு எதிரான வன்முறை

ஐ.நா பொதுசபை பெண்களுக்கு எதிரான வன்முறை என்பதைப் பெண்களுக்கு உடல்ரீதியாக பாலியல்ரீதியாக அல்லது மனரீதியாக துன்பம் விளைவிக்கும் மற்றும் பொதுவாழ்வில் அல்லது தனிப்படட்ட வாழ்வில் அவர்களது சுதந்திரத்தை முடக்கும் எந்தவொரு செயல் அல்லது அச்சுறுத்தல் என வரையறுத்துள்ளது.

### குடும்பத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறை

- கணவன் மற்றும் மனைவியரிடையே உடல் மற்றும் உள்ளம் சார்ந்த பொருத்தப்பாடின்மை
- மனைவியை வேலைக்காரி போல நடத்துதல்
- குடும்பத்தின் வறுமை பொருளாதார பற்றாக்குறை
- மனம் விட்டுப்பேசும் பண்பில்லாமை
- ஆணவப்போக்கு
- தகாதவார்த்தைகளைப் பயன்படுத்துதல்
- கணவனின் குடிப்பழக்கம்
- மனைவி கணவனை அவமதித்தல்
- குடும்ப வன்முறை தடுப்புச்சட்டம் - 2005

### குடும்ப வன்முறை தடுப்புச்சட்டத்திற்கான தண்டனை

- ஓராண்டு சிறை தண்டனை

- பிரச்சனையான காலத்தில் மனைவியின் குடும்பச்செலவுக்கு பணம் அளித்தல்
- குடும்பவன்முறைக்கு ஆளாக்கப்படும் பெண்களுக்கு பெண் பாதுகாப்பு அலுவலரை நியமித்தல்.

**பாதுகாப்பு நடவடிக்கைகள்**

- ஊடகங்கள் மூலம் பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
- வீட்டிற்குள் பெண்கள் அதிகமாக நகை அணிவதைத் தவிர்த்தல்
- அறிமுகமில்லாத நபர்களை வீட்டிற்குள் அனுமதிக்காதிருத்தல்
- தமிழகஅரசு வீட்டில் தனியாக உள்ள முதியோர்களின் ஓய்வூதியத்தை காவல் நிலையத்தில் பதிவு செய்ய அறிவுறுத்துகிறது.

**பள்ளியில் சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள்**

**தொடக்கக்கல்வி**

5-10 வயதிற்குள் உள்ள மாணவர்கள் பள்ளிக்கூட வளாகத்தில் உதவியாளர்கள் ஒருசில ஆசிரியர்களால் இவர்கள் பாலியல் தொல்லைக்கு ஆளாகின்றனர். நல்லதொடுதல் மற்றும் தவறான தொடுதல் குறித்த உணர்வினை மாணவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். அன்னியர்கள் தரும் உணவுப்பொருட்களையும் பானங்களையும் வாங்கக்கூடாது என்றும் குழந்தைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

**உயர்நிலைப்பள்ளி**

10 -16 வயதுவரை உள்ள இளங்குமரப்பருவத்தில் எதிர்பாலினத்தவரிடத்தில் கவர்ச்சி ஏற்படுவதும் தனது தோற்றம் உடற்கட்டு பற்றிய கவலைகள் அதிகமாக

உள்ளது. ஒருசில தீயவர்களோடு கொண்ட நட்பின் காரணமாக திரைப்படம் தொலைக்காட்சி இணையம் போன்றவற்றின் செல்வாக்கின் விளைவாகவும் உடன்பயிலும் மாணவர்களை கேலிசெய்வதும் அவதூறுகளைக் கிளப்புவதும் கைப்பேசி மூலம் அவர்களோடு தொடர்புகொண்டு உரையாடவும் முயல்கின்றனர். சமூகஉளவியலாளர்கள் மற்றும் மனநலமருத்துவர்கள் மூலம்இப்பிரச்சனைக்கு தீர்வுகாண முயலவேண்டும்.

**மேல்நிலைப்பள்ளி**

- இவர்கள் 16-19 வயதிற்குட்பட்டவர்கள் இவர்களிடம் சொந்தமாக முடிவு எடுக்கும் திறனும் சிக்கல்களை எதிர்நோக்கும் துணிவும் தனது எதிர்கால வாழ்வு பற்றிய கனவுகளும் நிறைந்திருக்கும்.
- தோற்றம் நிறம் அழகு அவயவபூரிப்பு போன்றவை பற்றிய எண்ணங்கள் அதிகமாக இருக்கும்.
- குமரப்பருவத்தினர் பெண்களைக்கேலி செய்தல் தவறான வார்த்தைகளைப் பயன்படுத்துதல் போன்ற செயல்பாடுகள் அதிகமாகக் காணப்படும்.
- இந்நிலையில் போதிய விளையாட்டு செயல்பாடுகள் நூலகம் ஆய்வகம் கணினி போன்றவற்றின் மூலம் தங்களது நேரத்தை பயனுள்ள வகையில்செலவிடவும் அறிவினை மேம்படுத்திடவும் உதவிடுதல் வேண்டும்.

**பணிபுரியும் இடத்தில் பெண்களுக்கான பாதுகாப்பு**

- பணிபுரியும் இடத்தில் பெண்களுக்கு பாதுகாப்பான வேலைச்சூழலை அமைத்துத் தரவேண்டும்.

- பெண்பணியாளர்களுக்கு பாலியல் துன்புறுத்தலின் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டங்களை செயல்படுத்துதல்
- பணிபுரியும் இடத்தில் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபடுவோர் கடும் தண்டனைக்கு உள்ளாவார்கள் என்னும் எச்சரிக்கை பலகையை அனைவர் கண்களிலும் படக்கூடிய இடத்தில் வைக்கவேண்டும்.
- இந்தியக் குற்றவியல் தண்டனைச்சட்டப்படி பெண்கள் பாலியல் புகார்கள் அளிக்க விரும்பினால் அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளை அளித்தல்.
- காவல்துறையில் புகார் அளிக்கப்பட்டால் புகார் அளித்த பெண்ணின் சார்பாகத் தேவைப்படும் ஆவணங்களை உரிய நேரத்தில் காவல்துறையில் சமர்ப்பித்து விசாரணை விரைவாக நடைபெற உதவுதல்.
- பெண்களின் பாதுகாப்புக்கு நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் பொறுப்பேற்க வேண்டியது அவசியமாகும்.
- பாலியல் கொடுமைகளும் வன்முறைகளும்
- ஒருவரது சம்மதமின்றி அவரை பாலியல் ரீதியாக தொடுதல் பாலியல்கொடுமை அல்லது துன்புறுத்தல் என்றறியப்படுகிறது.
- மெடெம் என்பாரது வரையறைப்படி பாலியல் ரீதியாக குழந்தையைக் கொடுமைப்படுத்துதல் என்பது 18 வயது நிரம்பாத குழந்தையை வயதுக்கு வந்த ஒருவர் பலாத்காரம் மூலம் அக்குழந்தையின் பாலுணர்வைத்தூண்டும் செயலாகும். இக்குற்றத்தைச்செய்பவர் பாலியல் குற்றவாளி என்றும் பழிக்கப்படுகிறார்.

**பாலியல் கொடுமைக்கு ஆளான குழந்தை வெளிப்படுத்தும் அறிகுறிகள்**

- மனச்சோர்வுடன் காணப்படுதல்

- பாலியல்ரீதியான செயல்களை வரைதல்
- மாறுபட்ட நடத்தைகளை வெளிப்படுத்துதல்
- ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நபர் அல்லது இடத்தைப்பார்த்து குழந்தை அதிக அளவிலான அச்சத்தை வெளிப்படுத்துதல்.

**பாலியல் வன்கொடுமை**

- ஒருவர் தன் விருப்பத்திற்கு மாறாக பாலியல் உறவில் ஈடுபட கட்டாயப்படுத்துவது பாலியல் வன்கொடுமை எனப்படுகிறது.
- தன்னை மணக்க விரும்பாத பெண்ணை கற்பழித்து கொலை செய்தல்
- தனியாக செல்லும் பெண்ணை வழிமறித்து தனது இச்சைக்கு சம்மதிக்க வலியுறுத்தல்.
- தன்னை விரும்பாத பெண்ணின் முகத்தில் அமிலம் வீசுதல்
- பெண்ணைக்கடத்தி விபச்சாரத்தில் ஈடுபடுத்துதல்

**பாலியல் வன்முறையைத் தடுப்பதில் கல்வியின் பங்கு:**

- முறையான பாலியல் கல்வி அளித்தல்
- சமத்துவம் சமூகநீதி சகோதரத்துவம் பற்றி கற்பித்தல்
- பெண்கள் பயஉணர்விலிருந்து விடுபட்டு தலைமைப்பொறுப்பேற்றல்
- பெண்கள் தங்களுக்கென சுயமரியாதை சுயகௌரவம் போன்றவற்றை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

- விழிப்புணர்வையும் திறன்களையும் வளர்த்துப்பெண்களைச் சுயசார்புள்ளவர்களாக மாற்றி அவர்களின் முன்னேற்றத்திற்குத் தடையானவற்றை நீக்குதல்
- பள்ளியில் மாணவர் வழிகாட்டுதல் மையம் அமைத்தல்
- பள்ளி விதிமுறைகளை கண்டிப்புடன்செயல்படுத்துதல்
- பள்ளியில் யோகா மற்றும் தியானம் கற்பிக்க ஏற்பாடு செய்தல்
- ஆசிரியர்களுக்கு அடிப்படை உளவியல் பயிற்சியும் யோகாப்பயிற்சியும் அளித்தல்
- மாணவர்களிடம் இணைந்து கற்றலை வலியுறுத்துதல்
- மாணவர்களிடம் உள்ள பாலின தப்பெண்ணங்களைக் களைதல்
- மாணவர்களுக்கு வாழ்க்கைத்திறன்களில் பயிற்சியளித்தல்
- சமூகவியல்பாக்கும் திறன்களில் பயிற்சியளித்தல்
- தற்காப்புத்திறன்களில் மாணவர்களுக்கு பயிற்சியளித்தல்

**உடலை போகப்பொருளாகக்கருதுதல்**

- ஒருவரை உயிரும் உணர்வும் அறிவும் உள்ள மனிதராகக் கருதாமல் அவரது உடலை மட்டும் வைத்து மதிப்பிடுதல் மனிதர்களை பண்டமாகக்கருதுதல் என்று அறியப்படுகிறது.
- பெண்ணின் உடலைப் பண்டமாகக் கருதுதலை எதிர்த்தல்
- ஒருவரை உயிரும் உணர்வும் அறிவும் உள்ள மனிதராகக் கருதாமல் அவரது உடலை மட்டும் வைத்து மதிப்பிடுதல் மனிதர்களை பண்டமாகக் கருதுதல் என்றறியப்படுகிறது.

- பெண்களை தன்னைப் போலவே துடிப்புடன் இயங்கும் சக மனிதராகக் ரகருதாமல் போகப்பொருளாகக் கருதுதலையே பெண்ணின் உடலை பண்டமாகக் கருதுதல் என்று பொருள்கொள்ளப்படுகிறது.

**பெண்கள்**

- கலையுணர்வுடன் ஆடை உடுத்துவதும் கல்வியிலும் கலைகளிலும் ஆண்களோடு போட்டியிடுவதும் வரவேற்கத்தக்கது.
- பெண்கள் தமது அறிவாற்றல் திறமைகளை வளர்த்துக்கொண்டு அனைத்துப்புலங்களிலும் ஆண்களுக்கு நிகராக விளங்குதலும் அன்பு பரிபு பிறரை அரவணைத்துச் செல்லுதல் பிறருக்கு உதவுதல் போன்ற குணங்களே தமக்குச் சிறந்த அணிகலன்கள் என்று கருதி பெண்கள் செயல்படல் வேண்டும்.
- பெண்கள் குறித்து சமூகத்தில் நிலவும் தவறான நம்பிக்கைகளை நீக்கி பெண்கள் தம்மை மேம்படுத்திக் கொள்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

**ஆண்கள்**

- ஆண்கள் பெண்களை சமஉரிமைகள் உடைய சக மனிதர்களாகவும் தமது தாயாகவும் தோழியாகவும் பார்க்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.
- பெண்களை சமமாக பாவிக்கும் ஆண்மகனே முழுமைபெற்ற மனதனாவான்
- அனைத்துப் பெண்களையும் கண்ணியத்துடன் நடத்தவேண்டும்.

**பெண்ணின் உடலைப் பண்டமாகக் கருதுதலை எதிர்த்தல் - ஆசிரியர்களது பங்குபணிகள்:**

- அனைத்து ஆசிரியர்களும் தமது சொல்லாலும் செயலாலும் பெண்கள் குறித்த சரியான கண்ணோட்டத்தையும் மனப்பான்மையையும் மாணவர்களிடம் உருவாக்கிடலில் நல்ல முன்மாதிரியாகவும் ஊக்கத்தைத் தூண்டும் சக்தியாகவும் விளங்க வேண்டும்.
- புதிய கருத்துகளையும் ஆரோக்கியமான சிந்தனைகளையும் மாண்புடைய நடத்தைமுறைகளையும் சுற்றுப்புற சமுதாயத்திற்கு கொண்டுசெல்லும் பொறுப்பு பள்ளிக்கூடத்திற்கு உண்டு.
- மாணவர்கள் சுத்தம் சுகாதாரம் சிகைஅலங்காரம் போன்றவற்றில் ஒழுங்குமுறைகளைக் கடைபிடிக்க ஊக்குவிக்கப்படல் வேண்டும்.
- கலையுணர்வுடன் சீருடை தெரிவுசெய்யப்படல் வேண்டும் அது அப்பகுதியின் தட்பவெப்ப நிலைமைகளுக்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.

**பெண்ணின் உடலைப் பண்டமாகக் கருதுதலை எதிர்த்தல் - பெற்றோர்களது பங்குபணிகள்:**

- தனது குழந்தைகளது உடல்நலத்திலும் ஆடைகளிலும் அக்கறை உடைய பெற்றோர் மேனாட்டவரது உடைகளை நூறு விழுக்காடு பின்பற்ற மாட்டார்கள்
- பெற்றோர் நமது பண்பாட்டு சூழலுக்கேற்பவே அழகான ஆடைகளை வாங்கித்தருகின்றனர். குழந்தைகளது வயதிற்கும் பருவநிலை மாற்றத்திற்கும் ஏற்ப ஆடைகளை வாங்கித்தரவேண்டும்.
- சீருடையும் ஆடை பற்றிய தெளிவான நெறிகளும் பின்பற்றப்படுவது கல்விநிலையச்சூழலை மேம்படுத்துவதோடு மாணவர்களது பாதுகாப்பையும் உறுதி செய்யும் செயல்பாடாகும்.

- கலைநிகழ்ச்சிகளில் நடைபெறும் நடனங்களும் பாடல்களும் உரையாடல்களும் வெறும் உடல் காட்சியாக மாறாதவையாகவும் கலைஉணர்வையும் பாலின சமத்துவத்தையும் வளர்ப்பதாகவும் இருக்கவேண்டும். இவற்றைத் தம் குழந்தைகளுக்கு கற்றுத்தர வேண்டியது பெற்றோரின் கடமையாகும்.